செய்தி வெளியீடு எண்: 724 நாள்:25.10.2019

# செய்தி வெளியீடு

மிகவும் பின் தங்கிய பகுதிகளில் வாழும் பழங்குடியின மாணவ/மாணவிகளின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக சேலம், நாமக்கல், ஈரோடு, விழுப்புரம், தருமபுரி, திருச்சி, வேலூர், நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களின் உட்பகுதிகளில் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஏற்படுத்தும் பள்ளிகளுக்கு ஆசிரியர்/மாணவர் விகிதாச்சாரத்தின்படி கல்வி மானியம், மற்றும் சீருடை, மடிகணினி, மிதிவண்டி, புத்தகப்பை, நோட்டுப்புத்தகம், காலணிகள் போன்றவைகளும் விடுதியில் தங்கி பயிலும் மாணவ/மாணவிகளுக்கு உணவு மானியம், இதர செலவின மானியம் ஆகியவை வழங்கப்படும் என அரசு ஆணை (நிலை) எண். 87, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(பமே1 (1))துறை நாள்.06.08.2019 வெளியிடப்பட்டுள்ளது

அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் பழங்குடியினர் வசிக்கும் உட்பகுதிகளில் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஏற்படுத்தும் பள்ளிகளுக்கு நிதி உதவி பெறுவதற்கு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களை அணுகி கருத்துருவினை சமர்ப்பிக்கும்படி பழங்குடியினர் நல இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**